# உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்னர் இலங்கையில் நல்லிணக்கத்தினை கட்டியெழுப்புதல் : சவால்களும், சந்தர்ப்பங்களும்

த. கிருஷ்ணமோகன்

**ஆய்வுச்சுருக்கம் :**

*இலங்கையில் நிகழ்ந்த முப்பது வருட உள்நாட்டு யுத்தத்தில் சுமார் 150,000 அதிகமான பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தல் (2012) வட மாகாணசபைத் தேர்தல் (2013) மற்றும் பாராளுமன்ற பொதுத் தேர்தல்களில் (2015) தமிழ் மக்கள் மிகவும் ஆர்வத்துடன் வாக்களித்தனர். இது 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்ட பின்னர் கிழக்கு மாகாணசபைக்கு நடாத்தப்பட்ட இரண்டாவது தேர்தலும், வடமாகாண சபைக்காக நடாத்தப்பட்ட முதல் தேர்தலுமாகும். உள்நாட்டு யுத்தம் 2009 ஆம் ஆண்டு வைகாசி மாதம் முடிவடைந்த காலத்திலிருந்து சர்வதேச சமுதாயம் தொடர்ச்சியாகக் கொடுத்து வந்த உயர் அழுத்தத்தினால் இரு மாகாணசபைகளுக்குமான தேர்தல்கள் நடைபெற்றன. இதனால் இத்தேர்தல்கள் தேசிய ரீதியாகவும், சர்வதேசரீதியாகவும் அதிக கவன ஈர்ப்புக்குள்ளாகியிருந்தன. இலங்கையின் இனமோதலுக்கான மூலகாரணங்களைக் கண்டுபிடித்து அதற்குப் பொருத்தமான அரசியல் தீர்வினை உருவாக்குவதில் எல்லாத் தரப்பும் இன்று வரை தோல்வியடைந்திருந்தாலும், குறைந்தபட்ச அதிகாரத்தினைக் கொண்டியங்கும் ஏனைய மாகாண சபைகளைப் போன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபைகளை இயங்குவதற்கான ஆணையினைத் தேர்தல் மூலம் மக்கள் வழங்கினர். உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தல் முப்பது வருடங்களாக தொடரும் இலங்கையின் இனமோதலுக்கான அரசியல் தீர்வினை முன்னோக்கி நகர்த்துவதற்கான முக்கியமானதொரு தேர்தலாகத் தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் கருதப்பட்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தீர்விற்கான தனது முன்மொழிவுகளை இத்தேர்தல் விஞ்ஞாபனமாக முன்வைத்து மக்கள் ஆணையினை கோரியது. அரசியல் உரிமைகளுக்கு மேலாக எதனையும் தாம் எதிர்பார்க்கவில்லை என்பதை வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தல்கள், மற்றும் பாராளுமன்றத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் அரசாங்கத்திற்கும், உலகத்திற்கும் அறிவித்தனர். இதன் மூலம் யுத்தவலயமாக இருந்த வடமாகாணம் தொடர்பாக கணிப்பிடப்பட்டிருந்த தவறான மதிப்பீடுகளுக்கு வடமாகாணசபைத் தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் முற்றுப்புள்ளி வைத்தன. ஆயினும் உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் இலங்கையில் நல்லிணக்கத்தினை உருவாக்குவதில் பொறுப்புடன் செயற்படவேண்டிய இலங்கை அரசாங்கம் அதிகாரப் பகிர்வுமூலமான நல்லிணக்கத்தினை உருவாக்குவதில் தொடர்ந்தும் தோல்வியடைந்தது. இந்நிலையில் 2015 ஆம் ஆண்டு அதிகாரத்திற்கு வந்த நல்லாட்சிக்கான ஐக்கிய முன்னணி அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு ஒன்றினூடாகப் பயணிக்க விரும்பி மக்கள் கருத்துக்களைக் கோரியுள்ளது. இலங்கையின் இனமோதலின் வரலாறு முழுவதிலும் இனவழித்தேசியவாத உணர்வுகளால் நிரம்பியிருந்தது. இதன் தொடர்ச்சியாகவன்றி புதிய கலாசாரத்தைப் படைக்க புதிய அரசியல் யாப்பு முயற்சிக்கிறது. இந்நிலையில் நாட்டின் அமைதி, சமாதானம், நல்லிணக்கம் என்பனவற்றினைப் பெற்றுக்கொள்ளக் கருத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் தொடர்பாகவும், புதிய யாப்பு உள்ளடக்கியிருக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.*

**திறவுசொற்கள் :** தேர்தல் விஞ்ஞாபனம், முன்மொழிவுகள், சமஷ்டிமுறைமை, பிராந்தியசபைகள், ஐக்கிய இலங்கை

## 1. அறிமுகம்

முப்பது வருடங்கள் நீடித்த உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபை முதலில் வெளியிட்ட தகவல்களின் படி 10,000 வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும், பின்னர்

வெளிவந்த ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையின்படி 40,000 வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றன. சிலர் இவ் எண்ணிக்கை இதனையும் விட அதிகமானது எனக் கூறுகின்றார்கள். ஆயினும் சார்ள்ஸ் பெட்றி 2012 ஆம் ஆண்டு சமர்ப்பித்த உள்ளக அறிக்கை 70,000 வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனக்கூறுகின்றது. இவைகளைவிட யுத்தத்தினால் பலர் அவயவங்களை இழந்தனர். பலர் கடும் காயங்களுக்குள்ளாகினர். எண்ணற்ற பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாகினர். எண்ணற்றோர் காணாமல் போனார்கள், பெரும்பாலானவர்கள் மன அழுத்தங்களுக்கு ள்ளாகினர். எண்ணற்றோர் சர்வதேச நியமங்களுக்கு உட்படாத தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டனர். மேலும் உள்நாட்டு யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் அரசியல் அகதிகளாகிப் பாதுகாப்பிற்காக நாட்டைவிட்டுத் தப்பிச் சென்றனர். ஏறக்குறைய ஐந்து இலட்சம் மக்கள் இதே காரணத்திற்காக உள்நாட்டுக்குள் இடம் பெயர்ந்தனர். உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் யுத்தவலயத்திற்குள்ளிருந்து உயிர்தப்பி வந்த மக்கள் இடப்பெயர்வு முகாம்களில் அல்லது நலன்புரி நிலையங்களில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு, பின்னர் அவர்களில் பெரும்பாலானவர்கள் விடுவிக்கப்பட்டனர். பலருக்கு என்ன நடந்தது என்பது இன்னமும் தெரியாத நிலையில் காணாமல்போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்நிலை எதனையும் கருத்தில் கொள்ளாது கிழக்கின் உதயம் மற்றும் வடக்கின் வசந்தம் என்ற பெயரில் நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்று வடகிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் ஆரம்பித்தது. யுத்தத்தினால் அழிந்த பௌதிக கட்டமைப்புக்களை மீண்டும் இலகுவாக உருவாக்கலாம் அல்லது திருத்தியமைக்கலாம்.

ஆனால் முப்பது வருட கால உள்நாட்டு யுத்தம் பூச்சியத்தில் முடிவடைந்து விட்டது என்ற ஏக்கத்திலிருந்தும் அவமானத்திலிருந்தும் மக்கள் மீளுருவாக்கம் பெறுவது மிகவும் கடினமாக இருந்தது. இலங்கை அரசாங்கம் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த அந்த இறுதி நாட்களில் நடாத்திய உச்சமட்ட இனப்படுகொலையின் நினைவுகளிலிருந்து மக்கள் இன்னமும் மீளவில்லை. இதனால் ஏற்பட்ட கோபம் மக்கள் மனதில் மாறாவடுநிலையாகிவிட்டது. இதிலிருந்து மக்களை உடனடியாக மீட்டு விட முடியாது. உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் வட மாகாணத்தில் தோன்றிய இராணுவமயமாக்கம், குடியிருப்புக் காணிகளை இராணுவம் அபகரித்தல், காணாமல் போதல், மகிழ்ச்சியற்ற வாழ்க்கைச் சூழல், மீள்குடியேற்றத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள், திட்டமிட்ட முறையில் நிகழ்த்தப்படும் கலாசார சீரழிவுகள் போன்றவற்றால் மக்கள் மனத்துயரங்களுக்குள்ளாகி வாழ்கின்றார்கள். முன்னை நாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் தேசிய முன்னணி அரசாங்கம் இப்பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கான செயற்பாட்டில் ஈடுபடாமல், நடைமுறையிலுள்ள மாகாண சபைகளின் அதிகாரங்களை குறைப்பதற்கே முயற்சித்தது. மேலும் உள்நாட்டு யுத்தத்தில் தோல்வியடைந்து அவமானப்படுத்தப்பட்டு கேள்விக்குறியாக நிற்கும் தமிழ் மக்களின் மனங்களை வெல்லுவதற்கு ஆட்சியாளர்கள் முயற்சிக்கவில்லை. பதிலாக வடமாகாணத்தில் தொடர்ந்து நிகழவுள்ள அபிவிருத்திகள், புனரமைப்புக்கள் தொடர்பாகவே பரப்புரை செய்தன. இந்நிலையில் யுத்தத்தில் வெற்றி பெற முடிந்த ஐக்கிய மக்கள் தேசிய முன்னணி அரசாங்கத்தினால் தமிழ் மக்களின் மனங்களை வெற்றி கொள்ள முடிந்ததா? தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்மொழிந்த தேர்தல் விஞ்ஞாபன

விடயங்களை வெற்றி கொள்வதிலுள்ள சவால்களும் தடைகளும் எவை? தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாகத் தென்னிலங்கையில் உருவாகியுள்ள கருத்துக்கள் யாவை ? இலங்கையின் எதிர்காலத் திற்கும், நல்லிணக்கத்திற்கும் தேவையான உள்ளடக்கங்கள் தொடர்பான கலந்துரையாடல்களுக்கும், விவாதங்களுக்கும், அப்பிராயங்களுக்கும் தேவையான களத்தினை நல்லாட்சி அரசாங்கம் உருவாக்கியுள்ளதா? போன்ற வினாக்களுக்கு இக் கட்டுரை விடையளித்துள்ளது. இதற்குத் தேவையான முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகள் அனைத்தும் இணையத் தளங்களூடாக பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், உய்த்தறிமுறை, தொகுத்தறிமுறை நுட்பமூடாக விவாதிக்கப்பட்டு, பண்புரீதியான ஆய்வாக மேற் கொள்ளப் பட்டுள்ளது.

**2. தேர்தல் விஞ்ஞாபனம்**

தமிழ் தேசியக் கூட்டமைப்பு " ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான சுய அரசாங்கம்" ஒன்றை உருவாக்கும் இலக்குடன் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரித்து 2013 ஆம் ஆண்டு வெளியிட்டது. இதில் கூறப்பட்டிருக்கும் விடயங்கள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பாதுகாப்பதற்கான முதற்படியாகக் கருதப்பட்டன. இதனால் இத்தேர்தல் வடமாகாண சபையினைக் கைப்பற்றி நிர்வாகிக்கும் தேர்தலாக அன்றி, தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தினைத் தீர்மானிக்கும் தேர்தலாகவே தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் நோக்கப்பட்டது. ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்ட பின்னர் மகிந்த ராஜபக்ஸதலைமையிலான அரசாங்கத்திற்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் நிலவி வந்த மனக்கசப்பு மேலும் உச்ச நிலையினை அடைந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் "உண்மையான நல்லிணக்கத்தையும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சமாதானத்தையும் இலங்கை மக்கள் அனைவருக்குமான அபிவிருத்தியையும் எய்துவதற்கு அதிகாரப் பகிர்வு அவசியமானது" என வலியுறுத்தியுள்ளதுடன், பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும் எனவும் கோரியது (The Mandate given to the Tamil National Alliance - TNA).

- தமிழ் மக்கள் தனித்துவமானதொரு தேசியமாகும். சிங்களமக்களுடனும், ஏனையவர்களுடனும் வரலாற்றுக்காலம் தொடக்கம் இலங்கையில் வாழ்ந்து வருகின்றார்கள்.
- புவியியல் ரீதியாக இணைந்துள்ளதும், தமிழ் மொழியைப் பேசுகின்ற மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றதுமான வடக்கு கிழக்கு மாகாணங்களே தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடமாகும்.
- தமிழ் மக்கள் சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள்.
- வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் சமஷ்டி கூட்டமைப்பினை உருவாக்கி இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தில் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட வேண்டும்.
- காணி, சட்டமும் ஒழுங்கும், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட சமூகப் பொருளாதார அபிவிருத்தி, வளங்கள் மற்றும் நிதி அதிகாரங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பங்கீடு செய்யப்பட்ட இறைமையின் அடிப்படையில் அதிகாரப்பரவலாக்கம் வழங்கப்பட வேண்டும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தென் இலங்கை அரசியல் தலைவர்களையும், புத்திஜீவிகளையும் அச்சத் திற்கும், குழப்பத்திற்குமுள்ளாக்கியது. பலர் தமிழ்தேசியவாதத்தின் மீள்எழுச்சியாகவே இதனை நோக்கினர். குறிப்பாக றோகன் குணரட்னா " தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழீழ விடுதலைப் புலிகளின் மறு அவதாரமாகும். பிரிவினை வாதச் சித்தாந்தத்தினை மீண்டும் முன் னெடுத்துச் செல்கிறது" (Rohan Gunaratna, 06 September 2013, 03:18:05) எனக் கூறியிருந்தார். இதேபோன்று சம்பிக்க வரணக்க

"தமிழ் தேசிய கூட்டமைப்பு எந்தவொரு கோரிக்கையினையும் சுதந்திரமாக உருவாக்க முடியும். ஆனால் இவற்றில் எவற்றையும் இலங்கையில் அடைய முடியாது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்மொழிவுகளைக் கவனத்தில் எடுப்பதற்குப் பாராளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மையும், மேலதிகமாக சர்வஜனவாக்கெடுப்பும் நடாத்தப்பட வேண்டும்" (Champika Ranawaka July 28, 2015, 8:52 am) எனக் கூறியிருந்தார். டலஸ் அழகப்பெருமா "தமிழ் தேசியக் கூட்டமை ப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தென்பகுதி மக்களுக்கு வெறுப்பூட்டுகின்றது. தமிழ் சிங்கள மக்களுக்கிடையில் உருவாக்கப்படும் நல்லிணக்கத்தினைச் சிதைத்து இரண்டு சமுதாயங்களையும் நிரந்தரமாகப் பிரித்துள்ளது" (Dullas Alahapperuma, Sep 10, 2015) எனக் கூறியிருந்தார். "ஜே.வி.பி.சமஷ்டிக்கு எதிரானதாகும். தமிழ் மக்களுக்குள்ள மனக் குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். அதற்கு சமஸ்டி தீர்வாக முடியாது. வடக்கு - கிழக்கு மாகாணங்கள் சட்டத்திற்கு புறம்பாக இணைந்திருப்பதை எதிர்த்து உயர்நீதிமன்றம் சென்றோம். இரண்டு மாகாணங்களும் தனித்தே செயற்பட வேண்டும்" (Vijitha Herath, 29 July 2015) என்பது ஜே.வி.பியின் கருத்தாக இருந்தது.

எனவே ஒருபக்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம், மறு பக்கம் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் இதற்கு வெளியிட்ட அச்சம், குழப்பத்திற்கும் மத்தியில் 2013 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தலில் 78.48 சதவீதமான மக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு ஆதரவு தெரிவித்து தமது வாக்குகளைப் பதிவு செய்தனர். இதன் மூலம் 38 ஆசனங்களைக் கொண்ட வடமாகாணசபையின் 30 ஆசனங்களைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது. (Sumith Chaaminda and Nishan decmel, 2013:6) இதே போன்று 2015 ஆம் ஆண்டு ஆவணிமாதம், 17 ஆம்திகதி நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஆதரவு தெரிவித்து யாழ் மாவட்டத்தில் 69.12 சதவீத மக்களும், வன்னி மாவட்டத்தில் 54.55 சதவீத மக்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 53.25 சதவீத மக்களும், திருகோணமலை மாவட்டத்தில் 25.44 சதவீத மக்களும், அம்பாறை மாவட்டத்தில் 13.29 சதவீத மக்களும் தமது வாக்குகளை பதிவு செய்தனர். இதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்களிடம் சமர்பித்திருந்த தேர்தல் விஞ்ஞாபனத்திற்கும், அரசியல் அபிலாசைகளுக்கும் வழங்கப்பட்ட உயர்ந்த பட்ச அங்கீகாரமாக கருத முடியும்.

அதேநேரம் வடமாகாணசபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதாயினும் தேவையானதாகும். வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையினை எதிர்பார்த்திருந்தது. ஆனால் வடமாகாண மக்கள் தமது விரைவில் மீளும் திறனையும், உறுதியான கொள்கையினையும் தமது வாக்களிப்பு நடத்தை மூலம் வெளிப்படுத்தி, வரலாற்றில் முதல் தடவையாக ஐந்தில் நான்கு

(5/4) பெரும்பான்மையுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு தமது அங்கீகாரத்தை வழங்கினர். இதே போன்று பாராளுமன்றத் தேர்தலில் 16 ஆசனங்களைப் பெற்று பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினைப் பெற்றுள்ள மூன்றாவது கட்சியாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தன்னைப் பதிவு செய்தது. இது ஒருவகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக கொழும்பு அரசியல் தலைவர்கள் முன்வைத்த விமர்சனங்களுக்கு தமிழ் மக்கள் வழங்கிய பதிலாகவும் கருத முடியும். மறுபக்கத்தில் பேச்சளவிலன்றிச் செயலளவில் ஆற்ற வேண்டிய பணிகள் அதிகம் உள்ளது என்பதைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு தமிழ் மக்கள் புரிய வைத்தனர் என்று கூறலாம்.

யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்புக்களுக்குக் குறிப்பாக அவயவங்களில் இழப்பு, விதவைகள், அநாதைகள் வடுக்கள், துன்பங்கள், சுயமரியாதை இழப்புக்கள், அவதூறுகள் போன்ற மன அழுத்தங்களினால் ஏற்பட்ட துன்பங்களுக்கு நிவாரணம் தேடுவது, யுத்தப்பிரதேசத்தில் தொடர்ந்து நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினை வெளியேற்றுவது, இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கும் குடியிருப்பு நிலங்களை மீட்பது, மனித உரிமைகள் விவகாரத்திரனை கையாள்வது உட்பட பல அத்தியாவசியத் தேவைகளுக்கு வடமாகாண சபை அங்கத்தவர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் முன்னுரிமை வழங்கவேண்டியிருந்தது. மேலும், யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தி மாத்திரமன்றி, யுத்தம் கொடுத்த கொடூரமான வடுக்களுக்கும், முப்பது வருட யுத்தத்தின் மூலம் அடைய முயற்சிக்கப்பட்ட அரசியல் அபிலாசைகளுக்கும் நிரந்தரத் தீர்வு தரப்பட வேண்டும். இதற்கு தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே நிர்வகிக்கக் கூடிய அரசியல் அலகு உருவாக்கப்பட வேண்டும் என்ற செய்தியை வடமாகாண சபைத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் அரசாங்கத்திற்கு தெரிவித்தனர். இந்நிலையில், இவைகளுக்காகவும், அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காகவும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றத் தான் தயாராக இருப்பதாக முதலமைச்சர் குறிப்பிட்டிருந்தார். தமக் கிடையில் அரசியல் மோதல்களுக்கு இடம் கொடுக்காமல் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுடைய நலன்களை உச்சநிலையில் பேணுவதற்கான வேலைத்திட்டங்களை மிகவும் அவதானத்துடனும், தியாக உணர்வுடனும் செயற்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்திற்கும் தமிழ்த் தலைவர்களுக்கு உள்ளது. அதேநேரம் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு அரசாங்கத்துடன் வெளிப்படைத் தன்மையுடனும், கூட்டுறவுடனும் செயற்பட வேண்டிய தேவையும் தமிழ் தலைவர்களுக்கு உள்ளது என்பதையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**3. நிறைவேற்றப்படாத முன்மொழிவுகள்**

1925 ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற கண்டிய தேசிய பேரவை (Kandyan National Assembly) இலங்கையில் சமஸ்டி ஆட்சி ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் கோரியது. அதேநேரம் இங்கிலாந்தில் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை முடித்துவிட்டு 1925 ஆம் ஆண்டு இலங்கைக்குத் திரும்பிய எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா முற்போக்கு தேசியக்கட்சியை (Progressive Nationalist Party) ஆரம்பித்து இலங்கைக்கான சமஸ்டி என்பதை பிரதான கொள்கையாகக் கொண்டு செயற்பட்டார். இது தொடர்பாக Ceylon Morning Leader என்னும் பத்திரிகையில் 1926 ஆம் ஆண்டு வைகாசி மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரை ஆறு கட்டுரைகளை எழுதியிருந்தார். இலங்கைக்கான சமஸ்டி அரசாங்கம் என்னும் தலைப்பில் 1926 ஆம் ஆண்டு ஆடி மாதம்

17 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரையில் இலங்கைக்கான உள்ளக சமஸ்டி அல்லது சமஸ்டி அமைப்புத் தொடர்பாக எஸ் டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா முன்மொழிந்தார். கண்டிய தேசிய பேரவை பிரதேச சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என 1972 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் கோரியது. ஆகவே இலங்கையில் சமஸ்டி ஆட்சிக்கான கோரிக்கையை முதலில் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா முன்வைத்தார் (Perera KKS, 25 September 2015). எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா தமது அரசியல் வாழ்வின் ஆரம்ப காலத்தில் அப்போது நிலவியிருந்த மாகாண நிர்வாகப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு சமஸ்டி அரசியல் அமைப்புதான் கூடியளவிற்கு பொருத்தமானது என்ற கருத்தை வெளிப்படுத்தினார். இது இலங்கையின் பல்வேறுபட்ட இனங்களிடையே கூடியளவு புரிந்துணர்வு ஏற்படுவதற்கு வழிவகுத்து அரசியல் ரீதியான அமைதி ஏற்படுவதற்கு வழி வகுக்கும் என அவர் நம்பியிருந்தார். அவர் கருதிய சமஸ்டி அமைப்பு கண்டிய தேசியப் பேரவை கருதிய மூன்று அலகுகள் என்பதை விட விரிவானதொன்றாக இருந்தது.

1949 ஆம் ஆண்டிலிருந்து கடந்த அறுபத்தேழு வருடங்களுக்கு மேலாக இலங்கை தமிழரசுக் கட்சி (சமஸ்டிக் கட்சி) சமஸ்டி அரசாங்க முறையினைக் கோரி வருகிறது. இதற்கிணங்க சமஸ்டி அமைப்பை உருவாக்குவதற்கு இலங்கைக் தமிழரசுக் கட்சித் தலைவர். எஸ்.ஜே.வி. செல்வநாயகமும், எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும்வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிராந்திய சபைகளை உருவாக்கு வதற்கான ஒப்பந்தம் ஒன்றில் 1957 ஆம் ஆண்டு கைச்சாத்திட்டனர். பின்னர் இது கைவிடப்பட்டது. 1965 ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்காவும், செல்வநாயகமும் மாவட்ட சபைகளை உருவாக்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர். இதுவும் பின்னர் கைவிடப்பட்டது. 1992 ஆம் ஆண்டு மங்கள முனசிங்கா தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழு பதின்மூன்றாவது அரசியல் யாப்புத் திருத்தத்தில் கூறப் பட்டுள்ள "பொதுப் பட்டியல்" அதிகாரத்தினை இல்லாதொழித்து, அதனை மாகாணசபைகளின் அதிகாரப் பட்டியலுடன் இணைக்க வேண்டும் என ஆலோசனை கூறியிருந்ததுடன், வடக்கு கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாகப் பிரித்து நிர்வகிக்க வேண்டும் எனவும் கூறியிருந்தது (Mangala Moonesinghe Parliamentary Select Committee-Interim Report 1992). அப்போது கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டிருந்தன. இம் மாகாண சபையினைக் கருத்தில் கொண்டே தமது ஆலோசனையினை இக்குழு முன்வைத்திருந்தது.

1995, 1997, 2000 ஆம் ஆண்டுகளில் முன்னைநாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஒற்றை ஆட்சிக்குள் பிராந்தியங்களின் ஒன்றியம் (Union of Regions' Article 1 (1) } என்ற பெயரில் புதியதொரு அரசாங்கமுறையினை உருவாக்க நகல் அரசியல் யாப்பு ஒன்றினை வரைந்திருந்தார். இந் நகல் யாப்பின் அத்தியாயம் XV பிராந்தியங்களின் அதிகாரப் பங்கீடு தொடர்பாக எடுத்துக் கூறியிருந்தது (Sathananthan.S, 3 December 1997) வடக்கு-கிழக்கு பிராந்தியங்களின் இணைப்பு என்பது தமிழ் - முஸ்லிம் அரசியல் கட்சிகள் தமக்குள் ஆலோசித்து முடிவெடுத்துக் கொள்ள விடப்பட்டது. இக்காலத்தில் முன்னைநாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அமைச்சரவை அங்கத்தவராக இருந்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஐந்தாம் திகதி வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தமிழ விடுதலைப் புலிகளுடன் ஒஸ்லோவில் நடாத்திய பேச்சுவார்த்தையின் போது "ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டியை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று ரீதியாக தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசத்தில் உள்ளக சுய

நிர்ணய உரிமைக் கோட்பாட்டினை ஏற்றுக் கொண்டு அரசியல் தீர்வு காண்பதற்கு உடன்பட்டிருந்தார்" (Oslo Declaration, 5 December 2002).

ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் மற்றும் யாப்பு ரீதியான அதிகாரங்களை மக்கள் அனைவரும் பெற்று ஒன்றாக வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதற்காக பாரராளுமன்ற தெரிவுக்குழுவினை 2006 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஸ அரசாங்கம் உருவாக்கியதுடன், தமிழ் தேசியக் கூட்டமைப்பினை இதில் இணைந்து பணியாற்ற வருமாறு அழைப்பு விடுத்தது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ சர்வக்கட்சி பிரதிநிதிகள் குழுவினை (All Party Representative Committee) நியமனம் செய்த பின்னர் ஆற்றிய உரையில்

"பண்டாநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தத் திலிருந்து எமது முயற்சிகளை நாங்கள் பகுப்பாய்வு செய்து பார்க்க வேண்டும். ஏனைய நாடுகளின் அனுபவங்களிலிருந்து பொருத்தமான பாடங்களை நாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். தீர்வினை நான் ஒரு போதும் திணிக்க மாட்டேன். ஆனால் நீங்கள் தேசியப் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுத் தரக்கூடிய பேச்சுவார்த்தைகளை உங்களுக்குள் நடாத்துங்கள். மக்கள் தம்மைத் தாமே நிர்வகித்துக் கொள்ளவும் தங்களுடைய அரசியல் பொருளாதார சூழலை தாமே கட்டுப் படுத்திக் கொள்ளவும் பொறுப்பு வழங்கப்பட வேண்டும். உலகில் பல நாடுகளில் இது வெற்றிகரமாக முயற்சிக்கப்பட்டுள்ளது. இதற்கு பல உதாரணங்கள் எமது அயல் நாடாகிய இந்தியா உட்பட பல நாடுகளில் உள்ளன. மோதலுக்கான பின்னணியை அடிப் படையாகக் கொண்டு நாட்டினுடைய இறைமையினை தியாகம் செய்யாது ஆகக் கூடுதல் சாத்தியமான பரவலாக்கத்தினை நாம் உருவாக்குதல் வேண்டும்" (Sumanthiran, M.A, September 15, 2013, 9:06 pm )எனத் தெரிவித்திருந்தார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகள் நீண்ட கால தீர்க்கப்படாமல் தாமதமாகி வரும் இலங்கையின் இனமோதலுக்கு அரசியல் தீர்வு காணுமாறு மோதலுடன் தொடர்பு டையவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்ததுடன், காணி விடயங்கள் தொடர்பாகவும் குறிப்பிடுகின்றது. (பந்தி இலக்கம் 9.185). மேலும் உயர்பாதுகாப்பு வலயங்கள், இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் என்பவற்றால் காணிகளை இழந்த மக்களுக்கு பொருத்தமானவகையில் நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும். (பந்தி இலக்கம் 9.142) எனத் தெரிவித்திருந்தது. ஆனால், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்த சிபார்சுகளை நடைமுறைப்படுத்தி வருவதாக மகிந்த ராஜபக்ஸ அரசாங்கம் பரப்புரை செய்ததேயன்றி, முக்கியமான சிபார்சுகளாகிய இராணுவம் ஆக்கிரமித்துள்ள காணிகளை மீள வழங்குதல், மனித உரிமைகள், நல்லாட்சி, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறுதல் போன்ற விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் எதனையும் ஆட்சியில் இருக்கும் வரை எடுத்திருக்கவில்லை. மேலும் மகிந்த ராஜபக்ஸ அரசாங்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இவ்விடயங்கள் தொடர்பாகக் கலந்தாலோசித்து, ஆக்க பூர்வமான தீர்மானங்கள் எதனையும் நிறை வேற்றவில்லை. அதிகாரப் பரவாக்கம் தொடர்பாக கலந்தாலோசிப்பதற்கும் பதிலாக மாகாண சபைகளுக்கு பதின் மூன்றாவது அரசியல் யாப்பு திருத்தம் மூலம் வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களைக் குறைப்பது தொடர்பாக விவாதித்து வந்தது. இது மக்களுக்கான பிறிதொரு இராஜதந்திர அச்சுறுத்தலாகவே நோக்கப்பட்டது.

#### 4. விவாதிக்க வேண்டிய சவால்கள்

வடக்கு கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைக்க எடுக்கப்படுகின்ற முயற்சி வடமாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் இலங்கையில் அரசியல் காட்சி நிலையில் சர்ச்சைகளையும், நீண்ட

விவாதங்களையும் ஏற்படுத்தவுள்ளது. இச்சர்ச்சையிலும், விவாதத்திலும் ஈடுபடுகின்றவர்கள் ஜனநாயக அரசியல் சமநிலையினை உள்வாங்கி அறிவுபூர்வமாகச் சிந்தித்து, தமது கருத்துக்களை முன்வைப்பது சிறப்பான தாகும். வடமாகாண மக்கள், கிழக்கு மாகாணத்தினை வடமாகாணத்துடன் இணைத்துக் கொள்வதற்குத் தமது விருப்பத்தினை வெளியிட்டுள்ளனர். சமூகக்கட்டமைப்பிற்குள் நின்று சிந்தித்தால் மக்களுடைய ஆதரவுடன் வடமாகாண சபை கிழக்கு மாகாணசபையுடன் இணைந்து பணியாற்றத் தயாராகவுள்ளது என்ற உண்மை புலனாகிறது. ஆனால் கிழக்கு மாகாண மக்களும், மாகாண சபையும் இதற்கு தமது ஆதரவினை வழங்க வேண்டும் அல்லது சட்டபூர்வமான அங்கீகாரத்தினை அரசியல் யாப்பு ரீதியாகப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு பெற்றுக்கொள்வதில் பல சவால்கள் உள்ளன. இன்றுள்ள நிலையில் கிழக்கு மாகாணசபை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருப்பது இதற்கு மேலும் சவாலாக அமையும். இதனை மேலும் தெளிவாக விளங்கிக் கொள்வதற்குக் கிழக்கு மாகாணத்தின் அரசியல் கட்சி நிலையினைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

மிகவும் இலகுவாகக் கிழக்கு மாகாண மக்களிடமிருந்து வடக்கு கிழக்கு மாகாண இணைப்பிற்கான ஆதரவினைப் பெற்று விட முடியாது. மூன்று மாவட்ட ங்களை உள்ளடக்கியுள்ள கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்குச் சமமான வாக்கு வங்கியினை முஸ்லிம் மக்கள் வைத்திருக்கின்றார்கள். பெருமளவிற்கு அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்வதுடன், நிர்ணயம்மிக்க அரசியல் சக்தியாகவும் உள்ளனர். மேலும் கிழக்கு மாகாணத்தின் எல்லைப் பகுதிகள் சிங்கள மக்களின் வாழ்விடமாக மாற்றமடைந்துள்ளது என்ற உண்மையினையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். 2012 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பின் படி கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் தமிழ் மக்கள் 39.79 சதவீதமாகவும், முஸ்லிம் மக்கள் 36.72 சதவீதமாகவும், சிங்கள மக்கள் 23.15 சதவீதமாகவும், ஏனையவர்கள் 0.34 சதவீதமாகவும் உள்ளனர். (A2: Population by Ethnic Group According to Districts 2012).

இந்நிலையில் வடமாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தினை இணைத்தால் தமிழ் மக்கள் அரசியல் அதிகாரம் மிக்க சமூகமாக மாற்றமடைந்து விடுவார்கள். அத்துடன் வடக்கு - கிழக்கு இணைப்பின் மூலம் தமது அரசியல் செயற்பாட்டுத் தளத்தினை நிரந்தரமாக இழந்துவிடுவதற்கு வாய்ப்பு உருவாகலாம் என்ற அச்சம் கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகத்திடம் உள்ளது. அதேநேரம் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் வடமாகாணத்துடன் இணைவதற்கு சம்மதம் தெரிவித்தால் அவர்கள் தமது அரசியல் தலைமைத்துவ அபிலாசைகளுக்கான விட்டுக் கொடுப்புக்களை தமிழ் மக்களிடமிருந்து எதிர்பார்க்கக் கூடும். இதே போன்று கிழக்கு மாகாண தமிழ் மக்களும் தமது அரசியல் தலைமைத்துவ அபிலாசைகளுக்கான விட்டுக் கொடுப்புக்களை வடமாகாண தமிழ் மக்களிடமிருந்து எதிர்பார்க்கக்கூடும். இவைகள் எல்லாவற்றிற்கும் வட மாகாண தமிழ் மக்கள் தயாராக இருக்கும் நிலையிலேயே வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபை அல்லது சமஸ்டி முறைமையை உருவாக்க முடியும்.

2012 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் 37 ஆசனங்களில் 14 ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், 11 ஆசனங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பும், 07 ஆசனங்களை ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ்சும், 04 ஆசனங்களை ஐக்கிய தேசியக் கட்சியும், 01 ஆசனத்தை தேசிய சுதந்திர முன்னணியும் பெற்றுக் கொண்டன.

அட்டவணை இல. 01 : கிழக்கு மாகாண இனவிகிதாசாரம் - 2012

| மாவட்டம் | பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் | முஸ்லிம்கள் | தமிழர்கள் | சிங்களவர்கள் |
|---|---|---|---|---|
| அம்பாறை | 441,287 | 44% | 18% | 38% |
| மட்டக்களப்பு | 347,099 | 25% | 74% | 01% |
| திருகோணமலை | 245,363 | 45% | 29% | 25% |

ஆதாரம் : குடிமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம்

(2008 - 2015 Gossip Lanka News) இதேபோன்று முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மூன்று வெவ்வெறு அரசியல் கட்சிகள் சார்பாக இத் தேர்தலில் போட்டியிட்டிருந்தனர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் 07 முஸ்லிம் பிரதிநிதிகளும், ஐக்கிய தேசியக் கட்சி சார்ப்பில் 01 முஸ்லிம் பிரதிநிதியும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் 07 முஸ்லீம் பிரதிநிதிகளும் வெற்றி பெற்றிருந்தனர். இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போட்டியிட்டிருந்தால் 15 பிரதிநிதிகளைப் கிழக்கு மாகாண சபையில் பெற்றிருக்க முடியும். தேர்தல் முடிவுகளைப் பொறுத்தவரை வடமாகாண மக்கள் போன்று கிழக்கு மாகாணத் தமிழ் மக்களும் தமது அரசியல் அதிகாரப் பகிர்வினைக் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மூலம் அரசாங்கத்திற்கும், உலகத்திற்கும் வெளிப்படுத்தியிருந்தனர். உண்மையில் பொருளாதார அபிவிருத்தியை விட அரசியல் உரிமைகள் தான் தமக்கும் முதன்மையானது என்பதை கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் முடிந்தவரைவெளிப்படுத்தியிருந்தனர். எனவே நடை பெற்ற இரு மாகாண சபைகளுக்குமான தேர்தல் களில் வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்கள் பொருளாதார அபிவிருத்தியை விட அரசியல் அபிலாசைகளுக்கே முன்னுரிமை வழங்கியுள்ளனர் எனக் கூறலாம்.

கிழக்கு மாகாணத்தில் தனித்தவமானதொரு அரசியல் தளத்தினைப் பெற்றுள்ள முஸ்லிம் மக்கள் அரசியல் தலைவர்களின் சுயலாபம் கருதிய பொருளாதார அபிலாசைகளுக்கான செயற்பாடுகளால் தமது பலம்மிக்க அரசியல் தளத்தினை இழந்தனர். மன்னர் காலத்திருந்தே ஆட்சியாளர்களுடன் இணைந்து சலுகைகள் பெறும் அடையாளச் சமூகமாக முஸ்லீம் மக்கள் வளர்ந்தவர்கள் என சிலர் வெளிப் படையாக கூறியும் வந்தனர். இவ்வாறானவர்கள் முஸ்லிம் மக்கள் பலமானதும், தனித்துவமானதுமான அரசியல் சக்தியாக வளர்ந்தால் தமது சுய பொருளாதார அபிலாசைகளுக்காக ஆட்சியாளர்களுக்கு முண்டு கொடுக்கும் அரசியலுக்கு ஆபத்தாகி விடும் என அஞ்சு கின்றன. கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் தமது அடையாள கூர்மைப்படுத்தலுக்கு அப்பால், தாம் இலங்கையில் வாழும் பிறி தொரு சிறுபான்மைச் சமூகம் என்பதை மறந்த விடக்கூடாது. கிழக்கு மாகாண த்தில் வாழ்கின்ற தமிழ் மக்களுடன் பல விடயங்களில் இரண்டறக்கலந்து நட் புறவுடன் வாழும் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து தாம் பெற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்குரிய சந்தர்ப்பம் உள்ளது. தமிழ் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்புடனும் பேச்சுவார்த்தையில் ஈடு பட வேண்டும். கிழக்கு மாகாணசபையில் கூட்டு அரசாங்கம் உருவாக்கப்பட்டால் முதலமைச்சர் பதவியை இரண்டு வருடத்திற்கு முஸ்லிம் தலைவர்களுக்கு விட்டுத் தர தமிழ் தலைவர்கள் ஏற்கனவே தயாராக இருந்துள்ளார்கள். எனவே கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கான தருணங்கள் உருவாக்கவும், பயன்படுத்தவும் வேண்டும்.

## 5. அரசியல் தீர்விற்கான முன்மொழிவுகள்

இலங்கையின் அரசியல் கட்சி நிலையிலும், சர்வதேச அரசியல் கட்சி நிலையிலும் இரண்டு மாகாணங்களும் தனித்து இயங்குவதே பொருத்தமானதும், சாணக்கிய மானதுமாகும் என்றதொரு கருத்து நிலவுகிறது. இச்சிந்தனைத்தளத்திலிருந்து சிந்தித்தால், சிறுபான்மை சமூகங்களுக்கு இரண்டு மாகாண சபைகள், இரண்டு முதலமைச்சர்கள் உருவாவது தவறானதல்ல என்ற கருத்து நிலைபெற்றுவிடலாம். இணைப்பு என்பதை விட அதிகாரப் பகிர்வே இன்றைய தேவையாகும். இலங்கையில் வாழுக்கின்ற எல்லா சமூகங்களும் சமாதான மாகவும், சுயகௌரவத்துடனும், நீதியுடனும் வாழ்வதற்குரிய சமூக ஜனநாயகச் சூழலுக்குரிய உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். இதனை இனமோதலுடன் தொடர்புடைய எல்லாத் தரப்பும் நன்கு விளங்கிக் கொண்டு சமாதானம், சுயகௌரவத்துடனான வாழ்க்கைச் சூழலை உருவாக்க முயற்சிக்க வேண்டும். இவ்வகையில் புதிய அரசாங்கம் நடை முறையிலுள்ள அரசியலமைப்பில் பின்வரும் வகையில் பலமாற்றங்களை செய்ய முயற்சிக்கலாம். இவ்வகையில் இலங்கையின் அரசியலமைப்பு முகவுரை (preamble) ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும். இம்முகவுரை பின்வருமாறு வரையப்பட்டிருக்கலாம்.

இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு, இறைமை, ஐக்கியம் என்பவற்றை இலங்கையர் களாகிய நாம் பாதுகாப்புதற்குத் திட சங்கர்ப்பம் பூண்டுள்ளோம். இலங்கை தொன்று தொட்டு பல்லின, பல்மொழி பல் சமய பன்மைத்துவ சமூகங்களாகும். நாம் இலங்கையர் என்ற நாட்டுப்பற்றை ஊட்டும் வகையில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் (சோனர்கள்), பறங்கியர்கள் வாழுகின்ற பன்மைத்துவ சமூகங்கள் நல் லிணக்கத்துடன் ஆளப்படவேண்டும். தமக் கேயரித்தான கலாசாரம், மொழி, அடையாளம் கொண்ட இப்பெரும் சமூகங்கள் மிகவும் கவனத்துடன் இலங்கையில் பாதுகாக்கப்பட வேண்டியவையாகும். இலங்கையின் வடக்கு, கிழக்கு பிராந்தியங்கள் தமிழ்பேசும் மக்களின் வரலாற்றுக்கால, பூர்வீக வதிவிடமாகும். இப்பிராந்தியத்தில் வாழும் தமிழ் மக்களுடன் இணைந்து ஏனைய பன்மைத்துவ சமூகங்கள் நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றனர். எனவே இலங்கையில் ஆள்புல ஒருமைப்பாடு, இறைமை, ஐக்கியம் என்பவற்றிற்கு வலுவூட்டுவதற்கும், பலப்படுவதற்கும், பன்மைத்துவ இன, மொழி, சமய சமூகமாகிய தாம் பாதுகாப்பாகவுள்ளோம் என்ற அகவுணர்வினை பெற்றுக்கொள்ளும் வகையில் எல்லா சமூகங்களினதும் சமத்துவம், பாதுகாப்பு, நல்லிணக்கம், எதிர்பார்ப்பு என்பன உறுதிப்படுத்தப்படும்.

இலங்கைக் குடியரசானது மத்தியரசாங்கம் மற்றும் பிராந்திய அரசாங்கங்களைக் கொண்டமைந்து "பிராந்தியங்களின் ஒன்றியம்" என அழைக்கப்படுவதுடன், இலங்கையின் பல்லின, சமய, கலாசார பண்புகளை கருத்திலெடுத்து நல்லிணக்கம், சகிப்புத்தன்மை, வெளிப்படைத்தன்மை, நாட்டுப் பற்றுள்ள சமுதாயத்தை உருவாக்கும் வகையில் சமயச் சார்பற்ற குடியரசாக இலங்கை பிரகடனப்படுத்தப்பட வேண்டும். வலுவேறாக்கத் தத்துவம் மற்றும் சம நிலைத் தலையீடுகள் கொண்ட அரசாங்க நிறுவனங்களும், கலப்பு அல்லது இரட்டை நிறைவேற்றுத்துறை முறைமையினை பிரயோகிக்கத்தக்கவகையில் ஈரங்க சட்டசபை யினையும் கொண்டிருக்கலாம்.

பாராளுமன்றம் பொதுமக்கள் சபை, பிராந்தியங்களின் சபை என இரண்டு சபைகளைக் கொண்டிருப்பதுடன், பொது மக்கள்சபை தேர்தல்மூலம்தெரிவுசெய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட கீழ் சபை எனவும், பிராந்தியங்களின் சபை மேல்சபை எனவும் அழைக்கப்படலாம். பிராந்தியங்களின் சபை அங்கத்தவர்கள் ஒவ்வொரு பிராந்திய சபையிலிருந்தும் மறைமுகத் தேர்தல் மூலம்

தெரிவு செய்யப்படுவதுடன், மேல்சபை அங்கத்துவத்தில் பிராந்தியங்களுக்கு சமபிரதி நிதித்துவம் வழங்கப்பட்டு, பிராந்தியங்களின் சபை நிரந்தரசபையாக்கப்பட வேண்டும். இதன் அங்கத்தவர்களில் குறிப்பிட்ட தொகையினர் சுழற்சி முறையில் தெரிவு செய்யப்படலாம்.

தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்படும் ஒருவர் ஐந்து (5) வருட காலத்திற்கு பதவி வகிக்கத்தக்க வகையில் ஜனாதிபதி நிறைவேற்றுத் துறைக்கு பொறுப்பாக இருப்பதுடன், பாராளுமன்றத்தின் கீழ் சபையிலிருந்து தெரிவு செய்யப்படும் அமைச்சரவையொன்று நிறைவேற்றுத் துறையுடன் இணைந்து செயற்பட வேண்டும். அமைச்சரவைக்கு ஜனாதிபதி தலைமை தாங்குவதுடன் ஜனாதிபதியின் அதிகாரங்கள் தற்போது நடைமுறையிலுள்ள பத்தொன்பதாம் (19) யாப்புத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அமைதல் வேண்டும்.

தமிழ், முஸ்லிம் சிறுபான்மைச் சமூகத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இரண்டு உபஜனாதிபதி பதவிகள் உருவாக்கப்பட வேண்டும். பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்காத, சமுதாயத்தில் உயர்கல்வி, ஒழுக்கம், நேர்மை, உயர்ந்த விழுமியங்களைப் பேணி வாழ்ந்து வரும் தமிழ், முஸ்லிம் சமுதாயத்திலிருந்து இதுவரை பாராளுமன்றத்தின் இரு சபைகளும் ஒன்றாகக் கூடி மறைமுகத் தேர்தல் ஒன்றின் மூலம் உப ஜனாதிபதி தெரிவு செய்யப்பட வேண்டும். உபஜனாதிபதிகளின் பதவிக்காலம் ஆறு (6) வருடங்களாக வரையறுக்கலாம். ஜனாதிபதி பதவி ஏதாவதொரு காரணத்தினால் வறிதாகிப் போனால் (இல்லாது போனால்) புதிய ஜனாதிபதி தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும்காலம்வரை உபஜனாதிபதிகளில் ஒருவர் எந்த சமுதாயம் எண்ணிக்கையில் அதிகமாகவுள்ளதோ அதனடிப்படையில் சுழற்சி முறையில் ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் குடியரசு ஜனாதிபதி ஒருவர் அனுபவிக்கும் அனைத்து அதிகாரங்களையும் உப ஜனாதிபதி அனுபவிப்பதுடன், ஜனாதிபதிக்காக பதில் கடமையாற்றும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் சுழற்சிமுறையில் உப ஜனாதிபதிகளில் ஒருவரை எந்த சமுதாயம் எண்ணிக்கையில் அதிகமாகவுள்ளதோ அதனடிப்படையில் பாராளுமன்றத்தால் நியமனம் செய்யப்படலாம். இரண்டு உப ஜனாதிபதிகளும் ஆணைக்குழுக்களை நியமனம் செய்வதற்காக உருவாக்கப்படும் அரசியலமைப்பு பேரவையின் அங்கத்தவர்களாக்கப்படுவதுடன், அரசியலமைப்பு பேரவையின் தலைவராக சுழற்சி முறையில் இரண்டு உபஜனாதிபதிகளும் வருடம் ஒருவர் என்ற வகையில் இரண்டு வருடங்கள் பதவி வகிக்கலாம்.

மக்களின் உரிமைகள் சுதந்திரங்களைப் பாதுகாத்து நிலைப்படுத்துவதற்காக உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், பிராந்திய மேல் நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களை அரசியலமைப்பு மூலம் உருவாக்கலாம். மக்களின் அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள், பிராந்திய சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் அனைத்தையும் பாதுகாக்கின்றதும், சட்ட ஆட்சியை நிலை நிறுத்துவதுமான சுதந்திர நிறுவனமாக உயர் நீதிமன்றம் மாற்றியமைக்கப்படுவதுடன், நீதித் துறையின் சுதந்திரத்தையும் அரசியல் தலையீடற்ற செயற்பாட்டையும் உச்சளவில் உறுதிப்படுத்துவதற்காக "சுதந்திர நீதிச்சேவை ஆணைக்குழு" ஒன்று நிறுவப்பட வேண்டும். சட்டமா அதிபர் திணைக்களம் மீது செலுத்தப்படும் அரசியல் தலையீட்டினை இல்லாதொழிப்பதற்காக இத்திணைக்களம் சுதந்திர நீதிச் சேவை ஆணைக்குழுவின் நேரடி மேற்பார்வையின் கீழ் கொண்டுவருவதுடன், பிராந்திய மேல்நீதிமன்ற நீதிபதிகள் சுதந்திர நீதிச்சேவை ஆணைக்குழுவின் சிபார்சுக்

கிணங்க ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட வேண்டும். பிராந்திய மேல் நீதிமன்றம் பிராந்தியத்தின் ஆள்புல எல்லைக்குள் புரியப்படும் அரசியலமைப்பு தவிர்ந்த அனைத்து குற்றங்களையும், உரிமை மீறல்களையும் விசாரணை செய்து நீதி வழங்கும். இந்நீதிமன்றத்தின் சுதந்திரமானதும், தடையற்றதுமான செயற் பாட்டிற்காக பிராந்திய சட்டமாதிபர் திணைக்களம் ஒவ்வொரு பிராந்தியங்களிலும் உருவாக்கப்படலாம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் "வட கிழக்குப் பிராந்தியம்" எனப் பெயரிடப் படலாம். பிராந்தியங்களின் எல்லைகள் மீள் வரையப்படுமாயின், இன விகிதாசாரத்தைக் கருத்திலெடுத்து இனங்களின் பெரும் பான்மையினைச் சிதைக்காத வகையில் பிராந்தி யங்களின் எல்லைகள் மீள் வரையப்படலாம். ஏனைய பிராந்தியங்கள் நடைமுறையிலுள்ள மாகாண எல்லைகளையும், பெரும் சமுதாயங் களின் விகிதாசாரத்தையும் கருத்திலெடுத்துப் பெயரிடலாம். பிராந்திய சபை ஒவ்வொன்றும் பிராந்திய சபைத் தேர்தல் சட்டத்திற்கு ஏற்ப உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதன் மூலம் உருவாக்கப்படலாம். பிராந்திய சபைகளின் அவைத்தலைவர் "சபாநாயகர்" என பெயர் குறித்து அழைக்கப்படவேண்டும். பிராந்தியங்களின் ஒன்றியத்திற்கான அதிகாரப் பட்டியல், பிராந்திய சபை களுக்கான அதிகாரப் பட்டியல் என இருவகை அதிகாரப் பட்டியல்கள் மாத்திரம் உருவாக்கப்படுவதுடன், ஒருங் கிணைந்த அதிகாரப் பட்டியல் முறை இல்லாதொழிக்கப்பட்டு, பிராந்திய சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரப் பட்டியலுக்குட்பட்ட சட்டங்களை ஆக்கும் அதிகாரம் பிராந்திய சபைகளுக்கு வழங்கப் படலாம். அதனை மீளப்பெற்றுக் கொள்ளும் அதிகாரம் பிராந்தியங்களின் ஒன்றியத்திற்கு வழங்கப்படலாகாது. பிராந்திய சபை உறுப்பினர்கள் தொகையில் 25% இட ஒதுக்கீட்டினை பெண்களுக்கு ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஒதுக்க வேண்டும்.

ஒவ்வொரு பிராந்திய சபைகளுக்கும் நியமனம் செய்யப்படும் ஆளுநர் குறித்த பிராந்தியத்தின் வாக்காளராகவும், அமைச்சு செயலாளர் தரத்தில் பதவி வகித்தவராக அல்லது இலங்கை நிர்வாக சேவை தரம்-1 பதவி வகித்தவராக இருத்தல் வேண்டும். வடகிழக்கு பிராந்தியம் தவிர்ந்த பிராந்தியங்களின் ஆளுநர், பிரதம மந்திரி மற்றும் முதலமைச்சரின் கருத்தொருமைப்பாட்டுடன் ஜனாதிபதியால் நியமனம் செய்யப்படும் அதேநேரம், வடகிழக்கு பிராந்திய ஆளுநர் இரண்டு உப ஜனாதிபதிகள் மற்றும் முதலமைச்சரின் கருத்தொருமைப்பாட்டுடன் ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட வேண்டும். ஆளுனர் நியமனத்தில் கருத்தொருமைப்பாடு எட்டப் படாதவிடத்து இவ்விடயத்தை அரசிய லமைப்புப் பேரவைக்கு ஜனாதிபதி சமர்ப்பித்து அரசியலமைப்பு பேரவையின் சிபார்சுக்கு இணங்க ஜனாதிபதியால் ஆளுநர் நியமனம் செய்யப்படலாம்.

மூன்று பெரும் சமுதாயங்கள் வாழுகின்ற பிராந்தியங்கள் அடையாளம் காணப்பட்டு, பெயர் குறித்து அரசியல் யாப்பில் கூறப் படலாம். (உதாரணமாக வடகிழக்கு, மத்தி, ஊவா, மேல் மாகாணங்கள்) பிராந்திய சபையின் உறுப்பினர்களில் பெரும் பான்மை ஆதரவினை எக்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பெறுகின்றார்களோ அக் கட்சியின் உறுப்பினர்களில் ஒருவரை குறித்த கட்சியின் கருத்தொருமைப்பாட்டுடன் முதலமைச்சர் ஆளுனரினால் தெரிவு செய்யப்படலாம். பிராந்திய சபைகளை நிர்வகிக்க மத்திய அமைச்சர் ஒருவர் நியமனம் செய்யப்படலாகாது. பதிலாக பிராந்திய சபைகளின் முதலமைச்சர்கள் அமைச்சரவையின் அங்கத்தவர்களாகக்

படலாம். முதலமைச்சரின் கடமைகளாக:- பிராந்தியங்களிற்கான திட்டங்களை வகுத்தல், பிராந்தியத்தின் நிதியினை முகாமை செய்தல், பிராந்தியத்தின் சட்டம், ஒழுங்கினை நிர்வகித்தல், முதலீடுகளை நிர்வகித்தல் என்பனவாக வரையறுக்கலாம்.

முதலமைச்சர்மூன்று பெரும்சமுதாயங்களில் ஒன்றைச் சேர்ந்தவராக இருந்தால் இரண்டு பிரதி முதலமைச்சர்களும் ஏனைய இரண்டு பெரும் சமுதாயத்திலிருந்து தெரிவு செய்யப்படலாம். பிரதி முதலமைச்சர்கள் முதலமைச்சர் கூட்டங்களில் பங்குபற்றும் அதிகாரம் கொண்டவர்களாகும். பிரதி முதலமைச்சர்களின் அதிகாரங்களாக: பிராந்திய சுகாதாரம், பிராந்திய சமூக சேவைகள், பிராந்திய கலாசாரம், பிராந்திய தொல்பொருள் மற்றும் நூதனசாலைகள், பிராந்திய போக்குவரத்து, பிராந்திய நகர அபிவிருத்தி என்பன வழங்கப்படலாம். முதலமைச்சர் பதவி ஏதாவதொரு காரணத்தினால் வறிதாகிப்போனால் (இல்லாது போனால்) புதிய முதலமைச்சர் நியமனம் செய்யப்படும் வரை பிரதி முதலமைச்சர்களில் ஒருவர் எந்த சமுதாயம் எண்ணிக்கையில் அதிகமாகவுள்ளதோ அதனடிப்டையில் முதலமைச்சராகப் பதவி வகிக்கலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் முதலமைச்சர் ஒருவர் அனுபவிக்கும் அனைத்து அதிகாரங்களையும் பிரதி முதலமைச்சர் கொண்டிருப்பார். முதலமைச்சருக்கான பதில் கடமையாற்றும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் சுழற்சிமுறையில் பிரதி முதலமைச்சர்களில் ஒருவரை பிராந்திய சபையின் கருத்தினை அறிந்த பின்னர் ஆளுனர் பதில் முதலமைச்சராக நியமனம் செய்யலாம்.

பிராந்தியங்களில் முதலமைச்சரையும், இரண்டு பிரதி முதலமைச்சர்களையும் உள்ளடக்கிய அமைச்சரவை உருவாக்கப்பட வேண்டும். பிராந்தியங்களுக்கு பெயர் குறித்து ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் தொடர்பில் இயற்றப்படும் சட்டங்களை அமுலாக்கம் செய்வதற்கு பிராந்திய அமைச்சரவை ஒன்று உருவாக்கப்படலாம். அமைச்சரவையின் எண்ணிக்கை அரசியல் யாப்பினால் வரையறுக்கப்பட்டிருப்பதுடன், அமைச்சரவையின் எண்ணிக்கை தற்போதைய எண்ணிக்கையாகிய ஐந்திலிருந்து (5) பத்தாக (10) அதிகரிக்கப்படலாம்.

சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகள் பேசுகின்ற சமூகாயத்தில் இடையூடாட்டத்தின் மூலம் சமூக நல்லிணக்கத்தினையும், நல்லாட்சியையும் ஏற்படுத்துவதில் தற்போது நடைமுறையிலுள்ள மொழிக் கொள்கை தோல்வி கண்டுள்ளதால், பிராந்தியங்களின் ஒன்றியத்தில் சிங்களம் - தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் அரசகரும மொழிகளாக்கப்பட்டு ஆங்கிலம் இணைப்பு மொழியாக பிரகடனப்படுத்தப்படலாம். பிராந்தியங்களின் நிர்வாக மொழிகளாக சிங்களமும், தமிழும் இருப்பதுடன், பாராளுமன்றத்தின் பிராந்தியங்களின் சட்டங்கள் ஆங்கிலமொழியில் உருவாக்கப்பட்டு அவைகள் சிங்களத்திலும், தமிழிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும். பிராந்தியங்களின் ஒன்றிய (மத்திய அரசாங்கம்) நீதிமன்றங்களின் நிர்வாக மொழியாக ஆங்கிலம், சிங்களம். தமிழ் ஆகிய மூன்று மொழிகளும் பயன்படுத்தப்படலாம். பிராந்தியசபைகளின் ஆள்புல எல்லைக்குட்பட்ட நீதிமன்றங்களின் நிர்வாக மொழியாகச் சிங்களமும், தமிழும் பயன்படுத்தப்படலாம். பாடசாலைகளில் போதனா மொழியாக சிங்களமும், தமிழும் இருப்பதுடன், பல்கலைக்கழகங்களின் போதனா மொழி ஆங்கிலம் இருத்தல் வேண்டும். பிராந்தியங்களின் ஒன்றியமானது மும்மொழிக் கொள்கையின் பயன்பாட்டுக்குத் தேவையான வசதிகள் அனைத்தையும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

தேசிய நிதி ஆணைக்குழு உருவாக்கப்படுவதுடன், தேசிய நிதி ஆணைக் குழுவில்

பிராந்தியங்களின் ஒன்றியத்திற்கும், பிராந்திய சபைகளுக்கும் சம அங்கத்துவம் வழங்கப்பட வேண்டும். பிராந்திய கணக்காளர் திணைக்களம் ஒன்று பாராளுமன்ற கணக்காய்வாளர் திணைக்களத்தின் கீழ் உருவாக்கப்படவேண்டும். பிராந்தியங்களின் ஒன்றியத்தின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் பிராந்திய சபைகளுக்கு வழங்கப்படும் நிதியின் அளவு பிராந்தியத்தின் சனத்தொகை, நிலவிஸ்தீரணம் என்பவைகளை அளவீடாகக் கொண்டு வகுக்கப்படலாம்.

பிராந்திய சபைகள் தமக்கான நிதிக் கட்டமைப்பை உருவாக்கி நிதி சேகரிக்கும் அதிகாரம் வழங்கப்படுவதுடன், வெளிநாட்டு நேரடி முதலீடுகள், மானியங்கள், அபிவிருத்தி உதவிகள் போன்றவற்றை பெற்று முகாமை செய்கின்ற அதிகாரம் பிராந்திய சபைகளுக்கு வழங்கப்படலாம். பிராந்திய சபைக்குட்பட்ட ஆள்புலஎல்லைப்பரப்பிற்குள் வரி அறவிடுதல், மற்றும் வருமானம் ஈட்டும் அதிகாரங்கள் பிராந்திய சபைக்கு வழங்கப்படுவதுடன், பிராந்தியங்களின் ஒன்றியம் வகுக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் பிராந்தியசபைகளூடாக மேற் கொள்ளப்படலாம்.

அரசியலமைப்புப் பேரவையினால் பிராந்திய பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் நியமனம் செய்யப்பட வேண்டும். பிராந்திய பொதுச்சேவைக்கான ஆட்சேர்ப்பு, இடமாற்றம், பதவியுயர்வு, பதவிநீக்கம், ஒழுக்கக் கட்டுப்பாடு ஆகியவை பிராந்திய பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு பொறுப்பாக்கப்படுதல் வேண்டும். பிராந்திய சபை அமைச்சு செயலாளர்கள் பிராந்திய பொதுச்சேவை ஆணைக்குழுவின் சிபார்சிற்கு ஏற்ப ஆளுனரினால் நியமனம் செய்யப் படல் வேண்டும். அதேபோன்று பிராந்திய தேர்தல்ஆணைக்குழு ஒவ்வொரு பிராந்திய சபையிலும் உருவாக்கப்பட்டு பிராந்திய சபைகள் மற்றும் உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தல்களை நடாத்தும் அதிகாரங்கள் வழங்கப்படலாம்.

தேசிய காணி ஆணைக்குழுவொன்று பாராளுமன்ற சட்டத்தின் மூலம் உருவாக்கப்படலாம். தேசிய காணி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தொகை பிராந்தியங்களின் ஒன்றியத்திற்கும் (மத்திய அரசாங்கம்) பிராந்திய சபைகளுக்கும் சம அளவில் வழங்கப்படலாம். அத்துடன் தேசிய காணி ஆணைக்குழு எல்லாசமூகத்தினரதும்சம பிரதிநிதித்துவத்தினைக் கொண்டிருப்பதுடன், காணி ஆணைக்குழுவின் மேற்பார்வையில் பிராந்திய சபைகளுக்குட்பட்ட அரசகாணிகள் அனைத்தும் பிராந்திய சபைகளுக்குரித் தாக்கப்படலாம். கரையோர பிராந்திய சபைகளைச் சுற்றியுள்ள பத்து கடல் மைல் தூரத்திற்குட்பட்ட கரையோரங்களும், கரையோர வளங்களும், கடலாதிக்கமும் பிராந்திய சபைகளுக்குரியதாகும். அரச காணிகளை பகிர்ந்தளிக்கும்போது தேசிய காணி ஆணைக்குழு மாவட்டத்திலுள்ள காணியற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதுடன், அதன் பின்னர் பிராந்தி யத்திலுள்ள ஏனைய மாவட்டங்களின் காணியற்றவர்களுக்கும் முன்னுரிமை வழங்கி காணி பகிர்ந்தளிக்கப்படலாம். காடுகள் தொடர்பாக சர்வதேச நியமங்களைப் பயன்படுத்தி தேசிய காணிப் பயன்பாட்டுக் கொள்கையொன்றை தேசிய காணி ஆணைக்குழு உருவாக்க வேண்டும். காடுகள், ஆறுப்பள்ளத்தாக்கு, நீர்த்தேக்கங்கள், நீரேரிகள், குளங்கள் போன்றவற்றின் பயன்பாடும் மற்றும் பாதுகாப்பு, தாவரங்கள் மற்றும்விலங்குகளின்பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக தேசிய காணி ஆணைக்குழுவின் சிபார்சுகளைப் பின்பற்றி மத்திய அரசாங்கமும், பிராந்திய சபைகளும் செயற்படலாம். தேசிய முக்கியத்துவம் கருதி குறித்த பிராந்திய சபையிலுள்ள காணியை விடுவிக்கும்படி மத்தியரசாங்கம் தேசிய காணி ஆணைக்குழுவிடம் கோர முடியும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் பிராந்திய சபையில் சமூகமளித்த உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளுடன் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். தேசிய முக்கியத்துவம் கருதி

காணிப் பயன்பாடு தொடர்பாக பிராந்தியங்களின் அரசாங்கத்திற்கும், பிராந்திய சபைக்கும் இடையில் கருத்தொருமைப்பாடு ஏற்படாதவிடத்து தேசிய காணி ஆணைக்குழு இது தொடர்பாகத் தேசிய அரசியலமைப்புப் பேரவைக்கு அறிக்கையிடலாம். இரண்டு அரசாங்கங்களுக்குமிடையில் கருத்தொருமைப்பாட்டினை ஏற்படுத்துவதற்காக தேசிய அரசியலமைப்பு பேரவை நியாயாதிக்கத்தீர்ப்பு சபையொன்றினை பாராளுமன்றத்தின் அனுமதியுடன் உருவாக்கலாம். நியாய தீர்ப்பு சபைக்கான உறுப்பினர்கள் பிராந்திய சபைகளினதும், பிராந்தியங்களின் ஒன்றியத்தினதும் சம அளவிலான உறுப்பினர்களைக் கொண்டமைந்திருக்கலாம். நியாயாதீர்ப்பு சபையின் கருத்துக்களினூடாக இரண்டு அரசாங்கங்களும் கருத்தொருமைப்பாட்டிற்கு வர முடியாமல் போனால், தேசிய காணி ஆணைக்குழு இறுதித் தீர்ப்பிற்காக உயர்நீதிமன்றத்திடம் இவ்விடயத்தை பாரப்படுத்தி, உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பினை இறுதித் தீர்ப்பாகக் கொள்ளலாம்.

தேசிய அரசியலமைப்பு பேரவையினால் தேசிய காவல்துறை ஆணைக்குழுவிற்குட்ட பிராந்திய காவல்துறை ஆணைக்குழு ஒன்றை உருவாக்கலாம். பிராந்திய காவல்துறை ஆணைக்குழுவின் பொறுப்பில் பிராந்திய காவல்துறைச்சேவை செயற்பட வேண்டும். பிராந்திய காவல்துறை அங்கத்தவர்களின் ஆட்சேர்ப்பு, காவல்துறைச்சேவை செயற்பட வேண்டும். பிராந்திய காவல்துறை அங்கத்தவர்களின் ஆட்சேர்ப்பு, இடமாற்றம், பதவிநீக்கம், ஒழுங்காற்று நடவடிக்கை என்பவற்றிற்குப் பிராந்திய காவல்துறை ஆணைக்குழு பொறுப்பாக்கப்படுவதுடன், பிராந்தியங்களுக்கிடையிலான இடமாற்றம் பிராந்திய காவல்துறை ஆணைக்குழுவின் ஆலோசனையுடன் மேற்கொள்ளப்படலாம். பிராந்திய காவல்துறைக்குத் தேவையான ஆலோசனைகளைப் பிராந்திய சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கமுடியும்.

பிராந்தியம் அல்லது பிராந்தியங்கள் தொடர்பாக அப்பிராந்தியம் உங்களுக்காக உருவாக்கப்பட்ட பிராந்திய சபை / சபைகளின் தீர்மானம் ஒன்றினால் அங்கீகரிக்கப்படுகின்ற வரையில் அல்லது அங்கீகரிக்கப்பட்டாலொழிய பிராந்தியம் / ங்கள் தொடர்பாக யாப்பில் திருத்தம் செய்யமுடியாது. யாப்பு திருத்தம் ஒன்று பிராந்திய சபை/களால் அங்கீகரிக்கப்பட்டால், அப்பிராந்திய சபை/களின் சபாநாயகர் இவ் அங்கீகாரம் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிடலாம். அங்கீகாரம் தொடர்புபட்ட திருத்தம் வர்த்தமானி அறிவித்தல் திகதியிலிருந்து பிராந்தியம் / கள் தொடர்பில் நடைமுறைக்கு வரும். பெரும் சமுதாயங்கள் வாழ்கின்ற பிராந்தியங்களாக அடையாளம் காணப் பட்டுள்ள பிராந்திய சபைகளில் சபாநாயகரைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பான தீர்மானம், நிலையியற் கட்டளைகளை அங்கீகரித்தல் தொடர்பான தீர்மானம், சமய வழிபாடு, அனுஷ்டானம் தொடர்பான செயற்பாட்டில் அல்லது போதனையில் ஏதேனும் சமயத்தின் செல்வாக்கு, சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு, பிராந்தியங்களின் பொருளாதார வாய்ப்புக்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளும் போது பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படலாம். ஒன்று சபையிலுள்ள உறுப்பினர்களுள் 3/2 பெரும்பான்மையோரின் வாக்குகளை இத்தீர்மானம் பெற்றிருத்தல் இரண்டாவதாக, சபையிலுள்ள இரண்டாவது, மூன்றாவது பெரும் சமுதாயங்களின் உறுப்பினர்களுள் 3/2 பெரும்பான்மையோரின் வாக்குகளை இத்தீர்மானம் பெற்றிருத்தல்.

**6. முடிவுரை**

உள்நாட்டு யுத்தத்தில் அரசாங்கம் வெற்றியடைந்த பின்னர் தமிழ் மக்களின் மனத் துயரங்களுக்குத் தீர்வு காண்பதில் அக்கறை செலுத்தாமல் பௌதிக மீள் கட்டமைப்புக்கள்,

குறிப்பாகப் பெருந்தெருக்கள், புகையிரத சேவை, வைத்தியசாலைகள் புனரமைப்பு, மின்சாரம், தொலைத்தொடர்பு என்பவற்றில் முழுமையாக கவனம் செலுத்தியது. ஆயினும் வடமாகாண மக்களுக்கு பௌதீக வசதிகள் எந்தளவிற்கு அவசியமோ அதனைவிட உள்நாட்டு யுத்தத்தினால் ஏற்பட்ட பேரவலங்கள்,துன்பங்கள், மனத் துயரங்கள், உளவியல் பாதிப்புக்கள், காணமல் போனவர்கள் பற்றிய தகவல்கள் அறியமுடியாமல் ஏற்பட்ட பரிதவிப்புக்கள் என்பவற்றிலிருந்து தாம் மீள வேண்டும் என்பதே மிகவும் அதிகமாக இருந்தது. வடமாகாண சபைத் தேர்தல் வாக்களிப்பில் பங்கு பற்றிய பலர் வடமாகாணத்தில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினால் தாம் அச்சமடைந்துள்ளதாகவும், இதிலிருந்து மீள்வதற்காகவே தேர்தலில் வாக்களித்ததாகவும் தெரிவித்த கருத்து யுத்தப்பாதிப்பின் உச்சக்கட்டளவை எடுத்துக் காட்டியது. வடமாகாணத்தில் இராணுவம் நிலை கொண்டுள்ளமை பாதுகாப்பு நோக்கங்களுக்கானதல்ல. பதிலாக அரசியல் நோக்கங்களுக்கானது. இதனால் தமது நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்படுகிறது என்பதும் மக்களுடைய கருத்ததாக இருந்தது. ஆகவே யுத்தம் முடிவடைந்த நிலையில் இராணுவம் வடமாகாணத்தில் நிலை கொள்ளத் தேவையில்லை என்பது மக்களுடைய முடிவாகும். தேர்தலைக் கண்காணிப்பதற்காக வெளிநாட்டியிலிருந்து வருகை தந்திருந்த கண்காணிப்பாளர்கள் "மக்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கு மிகவும் ஆர்வமாகவுள்ளனர். ஆனால் பாதுகாப்பு படையினரின் பிரசன்னத்தால் மக்கள் பதட்டமடைந்துள்ளனர்." எனத் தெரிவித்துள்ளமை இராணுவத்தின் தேவைக்கு அதிகமான பிரசன்னம் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியது. அதேநேரம் தமிழ் தேசியக் கூட்டமைப்புதனது தேர்தல்விஞ்ஞாபனத்தினூடாக தனிரசு கோரிக்கையினைக் கைவிட்டுள்ளது. ஆகக்குறைந்த மாகாண சபைகளுக்கூடாக சமஷ்டி முறையிலான அதிகாரங்களை முழுமையாக வழங்கும்படி ஜனநாயக வழிமுறையில் கேட்டுள்ளது. இது மக்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு ஜனநாயக வழிமுறைகளிலான தமிழ்தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடாகும்.

மறுபக்கத்தில் கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் ஒன்றிணைந்து மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முழுமையாக வழங்கும்படி கோருவதற்கும், மேலதிக அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் கிழக்கு மாகாண சபையினை தமது அதிகாரத்தின் கீழ் கொண்டு வரவேண்டும். கிழக்கு மாகாணத்தில் வாழும் பெரும்பான்மை சமூகத்தினராகிய தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் தமக்குள் புரிந்துணர்வு உடன் படிக்கையினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இப்புரிந்துணர்வு உடன்படிக்கை சாத்தியமற்றுப் போனால் கிழக்கு மாகாண சபையினை ஆளுகின்ற அதிகாரம் இரண்டு சமுதாயங்களின் கையிலிருந்து விடுபட்டு பெரும்பான்மை கட்சியொன்றிற்கு சலுகைகளுக்காக முண்டு கொடுக்கும் சபையாக மாற்றமடையும்.

வடக்கு கிழக்கு மாகாணசபை இணைந்த அதிகாரப் பகிர்வு தரப்பட வேண்டும் என எதிர்பார்ப்பது இன மோதலுக்கான அரசியல் தீர்வினை மேலும் தாமதப்படுத்தும், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பினை அரசியல் தீர்விற்கான அல்லது அதிகாரப்பகிர்விற்கான முன் நிபந்தனையாக விதிப்பது சிறந்த அரசியல் சாணக்கியமாக கருத முடியாது. வடக்கு கிழக்கு இணைப்பு அரசியல் தீர்விற்கான முன் நிபந்தனையாகுமாயின், கிழக்கு மாகாண மக்களின் (தமிழ், முஸ்லீம்) அரசியல் தலைமைத்து அபிலாசையை

நிறைவேற்றக்கூடிய புரிந்துணர்வு உடன் படிக்கையொன்றை வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் உருவாக்கிக் கொள்ளவேண்டும். அதேபோன்று வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்களுக்கு இடையில் காணப்படும் சமூக இடை வெளி குறைக்கப்பட அல்லது இல்லா தொழிக்கப்பட பொருத்தமுடைய சமூகப் பொறிமுறை உருவாக்கப்பட்ட வேண்டும். அதுவரையில் இணைப்பு என்பது மேற் போக்கானது, கற்பனையானது. இன்னோர்வகையில் கூறினால் இரண்டு மாகாண மக்களுக்கிடையிலும் நல்லிணக்கம் ஏற்படவேண்டும். இதனை வடக்கிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். இது குறைந்த பட்சம் கிழக்கு மாகாண அரசியல் தலை மைத்துவ அபிலாசைகளுக்கூடாகவாவது ஏற்படுத்தப்படலாம். தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு கிழக்கு மாகாண மக்கள் வழங்கும் ஆதரவு வடக்கு, கிழக்கு இணைப் பிற்கான ஆதரவாக கருத முடியாது. கிழக்கு மாகாண மக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமையிலான மாகாண சபையினையே விரும்புகின்றார்கள் என்பதே யதார்த்தமாகும். எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு இரண்டு மாகாணங்களிலும் ஆட்சியமைக்கக்கூடிய வகையில்தனது தந்திரோபாயங்களை வகுத்துக் கொள்வதே சிறந்த முடிவாக அமையும். இதனை உரிய முறையில் புரிந்து கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு பணியாற்றத் தவறுமாயின், கிழக்கு மாகாணத்தில் புதிய தமிழ்கட்சிகளின் உருவாக்கம் தவிர்க்க முடியாது போகலாம்.

**உசாத்துணைகள்**


1. A2 : Population by ethnic group according to districts, 2012, Census of Population & Housing, 2011, Department of Census & statistics Sri Lanka. URL Available on http://www.statistics.gov.lk/PophouSat/CPH 2011/index.php? filename = pop42&gp = Activities & tpl=3
2. ITN News, Sep 10, 2013, Strong challenge from TNA to national reconciliation. URL Available on http://www.itnnews.lk/ local-news/strong-challenge-from-tna-to-national- reconciliation/
3. JVP slams TNA manifesto and opposes federalism, 29 July, 2015 Tamil Guardian, URL Available on http://www.tamilguardian.com/article.asp?articleid=15412
4. Mangala Moonesinghe Parliamentary Select Committee - Interim Report 1992, URL Available on http://www.tamilnation.co/conflictresolution/tamileelam/92 selectcommittee.htm
5. Mirror Citizen, July 28, 2015 8:12am TNA mnifesto only election slogan: Patali, URL Available on http://www.tmirrorcitizen.dailymirror.lk/2015/07/28/tna-mainfesto-only-election-slogan-patali/
6. Oslo Declaration, Statement by the Royal Norwegian Government at conalusion of third session of peace talks between Sri Lanka and LTTE in Oslo, 5 December 2002, URL Available on http://www.tchr.net/oslo-declaration.pdf
7. Perera, K K S, 25 september 2015, SWRD Bandaranaike: sept. 26 is 56th death anniversary of formar pm S.W.R.D Bandaranaike, The Times of Sri Lanka, URL Available on http://www.timeesrilanka.com/tag/swrd-bandaranaike/
8. Report of the Commission of Inquiry on Lessons Leart and Reconcilliation, November 2011, More are

Available at http://www.priu.gov.lk/news_update/Current_ Affairs/ca2011112/FINAL%20LLRC%20 REPORT.pdf

9. Rohan Gunaratna, 06 September 2013, 03:18:05, Recent election manifesto of the TNA anavatar of the LTTE, Lankasri News, URL Available on http://www.lankasrinews.com/view.php?202d36B220e7nJd34ebvrUjM4cbdTZEIcddcQWRTAdbc4scpsbe43gF-p03e033A818O2
10. Sathananthan.S, 3 December 1997. Chabdrika's Devolution Proposals' 1997 Draft Constitution in Sri Lanka - Whither Devolution of Power?, URL Available on http://www.tamilnation.co/conflictresolution/tamileelam/cbkproposals/971203satha.htm
11. Sumanthiran M A, September 15, 2013, 9:06 pm storm in teacup : TNA'S Election Manifesto, The Island, URL Available on http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=88128
12. Sumith Chaaminda and Nishan de Mel, 2013 Provinaial Council Election 2013 A political Analysis Central, Nirthern and North Western Province, Verite Research Pvt Ltd, URL Availabe http://www.goole.lk/url?sa=t&rct=j&q=&esrc=s&source=web&cd=8&cad=rja&uact=8&ved=0a-hUKEwil2q0c5szIAhUFTO4KHYyrBCIQFghBMAc&url=http%3A%2Fwww.veriteresa rch.org%2F-downloadpdf_spreport.cfm%3Fpdf_3D17&usg=AFQjCNEWean5KX0vWI8uCn55TnefCL8gyw&b-vm=bv.117218890.d.c.2E
13. The Mandate Given to the Tamil National Alliance (TNA) URL Available on http://www.www.satp.org/satporgtp/countries.srilanka/document/paper/TNA_mANIFESTO.PDF